கல்கி

நிறுவனர்:

11-8-68

விலை 20 காசு

பிராயச்சித்தம் செய்ய முனைவீர்!

"காங்கிரஸ்காரர்கள் ரகளைகளாலும் ஊர்வலங்களாலும் தமிழகத்து அரசைக் கவிழ்க்க நினைத்தால், கேரளத்தில் காங்கிரசுக்கு ஏற்பட்ட நிலைதான் இங்கும் நடக்கும். அரசை நடத்துவதெப்படி என்ற பால பாடத்தை அறிஞர் அண்ணாவின் காலடியில் உட்கார்ந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

காங்கிரஸ் தலைவர் பதவியைக் காமராசர் இழந்தபிறகு எந்த வேலையும் அவருக்கென்று இல்லாமலிருந்தது. தமிழ் நாட்டில் ஏதோ அரசியல் வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்தார். தென்காசி இடைத் தேர்தலில் விழுந்த அடிக்குப் பிறகு காமராசருக்கு என்ன வேலை கிடைக்கப் போகிறது என்று நினைத்துப் பார்த்தேன். இங்கு வந்த பிறகு அறிந்துகொண்டேன், அவருக்குச் சரியான வேலை கிடைத்திருக்கிறது. அதுதான் அறிஞர் அண்ணாவின் சிலைக்குக் காவல் புரியும் வேலை.

ஒரு படி அரிசி வேண்டும் என்று ஊர்வலம் நடத்தும் காங்கிரஸ்காரர்களைக் கேட்கிறேன்.

கேரளத்தில் ஒரு படி அரிசி அல்ல—ஒரு பிடி அரிசிகூட சரிவரக் கிடைப்பதில்லையே! குருவி ரேஷன் தருகிறார்களே!

கேரளமும் இந்தியாவில் ஒரு பகுதி தானே! கேரள மக்களும் இந்திய மக்கள்தானே! அங்கிருக்கும் காங்கிரஸ்காரன் ஊர்வலம் நடத்தாதது ஏன்? உனக்கிருக்கிற நினைப்பெல்லாம் காங்கிரசல்லாத அரசு கவிழவேண்டும் என்பதுதானே! வேறென்ன பெரிய நோக்கம் உனக்கு?

மவுன ஊர்வலம் நடத்தினார்களாம் காங்கிரஸ்காரர்கள்! மவுன ஊர்வலம் நடத்துவது மரணத்திற்குப் பிறகுதான்! காங்கிரஸ் மவுன ஊர்வலம் ஏன் நடத்தினார்கள்? தென்காசியில் காங்கரஸ் மரித்துப் போனதே—இறந்து போனதே—அதற்காகவா?

ஒரு சிலர் தடியடிபட்டதற்காக மவுன ஊர்வலம் நடத்துகிறார்களே—காங்கிரஸ்காரர்கள்? நீதிவிசாரணை வேண்டும் என்கிறார்களே.

காங்கிரஸ் ஆளும் வடமாநிலத்தில் மாடு ஒன்று இறந்தற்காக நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் வெட்டப்பட்டனரே! அதற்கு எந்தக் காங்கிரஸ்காரர் ஊர்வலம் நடத்தினார்? அங்குள்ள காங்கிரஸ் அரசு நீதிவிசாரணைவைத்ததா? சொல்லுங்கள் காங்கிரஸ்காரர்களே?

நீதிவிசாரணை கேட்கும் காங்கிரஸ்காரர்களுக்குக் கூறிக்கொள்வேன்.

நீதிவிசாரணை கேட்பதற்கு முன்—நீதியுள்ள அரசை நடத்துவது எப்படி? மக்களுக்கு நன்மைசெய்யும் அரசை நடத்துவது எப்படி? எனும் அரசியல் அரிச்சுவடியைப் படித்துக் கொள்ளுங்கள்!

அதற்கு அண்ணாவின் சிலையைக் காவல் புரியாமல் — அண்ணாவின் வீட்டுக்குச் சென்று அவரது காலடியில் உட்கார்ந்து ஆட்சியின் பால பாடத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்!

போலீஸ் உடையை குண்டர்களுக்குத் தந்து ஊர்வலத்தை அடிக்கச் சொன்னதாகக் காங்கிரஸ்காரர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. இரண்டு பேர் வாய்ச் சண்டை போட்டுக்கொண்டார்களாம்.

ஒருவன் இன்னொருவனைப் பார்த்து 'அழுகிய கறியைத் தின்பவனே!'' என்று திட்டினானாம்!

அதற்குப் பதிலாக மற்றொருவன் "அட, பிரியாணி தின்பவனே, பழரசம் குடிப்பவனே'' என்று கூறினானாம்.

இதைப் பார்த்த பெரியவர் ஒருவர் 'என்னய்யா — அவன் உன்னை அழுகிய பழம் தின்பவன் என்று திட்டுகிறான் நீயோ பிரியாணி தின்பவனே என்று திட்டுகிறாயே!'' என்றாராம்,

அதற்கு அவன் "நான் சாப்பிடுவதை நான் சொல்லித்திட்டினேன். அவன் சாப்பிடுவதை அவன் சொல்லித் திட்டுகிறான் என்றானாம்!

அதுபோல காங்கிரஸ்காரர்கள் இன்று, போலீஸ் உடை போட்ட குண்டர்களைவிட்டு ஊர்வலத்தை அடிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள் என்றால், இருபது ஆண்டுக் காலப் பழக்கமோ என்னவோ.

காங்கிரஸ்காரர்கள் இப்படிப்பட்ட ரகளைகளாலும் ஊர்வலங்களாலும் தமிழகத்து அரசைக் கவிழ்த்துவிடலாம் என்று நினைக்கவேண்டாம்.

காங்கிரசல்லாத அரசைக் கவிழ்த்தால்—அதுவும் தெற்கேயுள்ள நாட்டில் கவிழ்த்தால் எப்படிப்போவார்கள் என்பதைக் கேரளத்து நிகழ்ச்சி நினைவூட்டுகிறது.

அக்ரமப் போக்கில் சென்றதால்—கேரளத்தின் ஆளும் கட்சியாய் இருந்த காங்கிரஸ் இப்போது 130 பேர்கொண்ட சட்டசபையில் 9பேர் இருக்கிறார்கள்.

கேரளத்தில் காங்கிரசுக்கு ஆழமாகக் குழியொன்று தோண்டிப் புதைத்ததுபோல் இங்கும் நடக்கலாம் என்பதைத்தான் அவர்களுடைய ஊர்வலமும் ரகளையும் காட்டுகிறது.

காங்கிரஸ்காரர்கள் செய்யவேண்டியதெல்லாம், ஒரு ஜெபமாலை வாங்கிக்கொண்டு போய் செய்த பாவங்களுக்காக பிரார்த்தனை செய்வதுதான! அப்போதுதான் அவர்கள் 20 ஆண்டுக்காலமாக செய்த பாவங்களாவது தொலையும்.

சென்னை கூட்டத்தில்
கேரள கல்வி அமைச்சர்
முகமது கோயா.

★

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 11—8—68 இதழ் 3

தடுத்து நிறுத்துங்கள்

கல்வி என்பது முழுக்க முழுக்க ஒரு மாநிலத்தைப் பொறுத்த விவகாரமாகும். இந்தியத் துணைக்கண்டம், மொழி வாரி மாநிலங்களாக இங்க எப்போது ஒப்புக் கொள்ளப்பட்டதோ, அப்போதே அந்த மாநில மொழியின் விவகாரமும், உரிய மாநிலத்துக்கே முழு உரிமை படைத்ததாகி விடுகிறது.

மாநிலங்களின் விவகாரத்தில் மத்திய அரசு தலையிடும் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த நிலை, உரியவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு தடுத்து நிறுத்தப்படவில்லை என்றால், இதே போக்கு ஒரு சர்வாதிகார மனப்பாங்கை வளர்த்து விட்டுவிடக் கூடிய பேரபாயம் உண்டாவதின்றும் யாராலும் தடுத்துவிட முடியாது.

மாநிலங்களின் உரிமைகளில் தலையிடக்கூடிய அளவுக்கு மத்திய அரசுக்கு இயல்கிறதென்றால் கல்வி, சுகாதாரம் போன்ற மாநில விவகாரங்களுக்குக்கூட, மத்திய அரசு தனித் தனி அமைச்சரகங்களைக் கொண்டிருப்பதுதான் என்று அறிஞர்கள் கருத்தறிவித்திருக்கிறார்கள்.

கல்வி, சுகாதாரம் போன்றவை மாநில அரசுகளின் பொறுப்பாக விருக்கும்போது, மத்திய அரசுக்குத் தனியாக இதற்கென்று ஒரு அமைச்சகம் தேவை இல்லை என்ற கருத்தையும் அண்மையில் தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

இதுபற்றி அப்போதே பிற மாநிலங்கள் ஆய்வு செய்து, தம் கண்டனத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்திருந்தால், நடுவரசின் அத்து மீறுகிற தலையீடுகளை ஓரளவுக்குத் தடுத்து நிறுத்தி இருக்க முடியும்.

குறிப்பாக, மத்திய அரசு, தன் அரசு அலுவலகங்களில் பணியாற்றுவோருக்கென்று மாநிலங்கள் தோறும் சில கல்வி நிலையங்களை ஏற்படுத்தி நடத்திக்கொண்டு வருகிறது, இந்த நிலையங்களில், அது தன் விருப்பப்படி மொழிக் கொள்கையைப் புகுத்தும் உரிமையினையும் பெற்றிருக்கிறது.

தமிழ் நாட்டை மட்டும் உதாரணத்திற் கெடுத்துக் கொண்டால், தமிழகத்தில் கல்வி நிறுவனங்களில் இந்திப் பயிற்சி இல்லை என்பது அரசின் கொள்கை. அதே வேளையில், மத்திய அரசுப் பள்ளிகளில் இப் பயிற்சி இடம் பெற்றிருக்கும்.

இது, மாநில அரசின் கொள்கைகளுக்கு மாறுபாடானது என்பது மட்டும் அல்லாமல், உரிமைகளையும் மறுக்கின்றதாகும்.

மாநில அரசு, மத்திய அரசின் அங்கமாகவே இயங்குகிறதென்றாலும், சில, பலவற்றில் மாநிலங்கள் தனித்தியங்க உரிமை நல்கப்பட்டிருக்கின்றன அரசியல் சாசனத்தில்.

அந்த உரிமை அடிப்படையில்தான், கல்விஎன்பது மாநில அதிகாரம் என்று வரையரை செய்யப்பட்டுள்ளது. அரசியல் சட்டவரையறைக்குட்பட்ட விதத்தில் மாநில அரசு, ஒரு கல்விக் கொள்கையை வகுத்துச் செயல்பட்டுக்கொண்டு வரும்போது, அதற்கு முரணான வகையில் அந்தந்த மாநிலங்களுக்குள் வந்து, தம் நிறுவனம் என்பதன்பேரால், தனது கொள்கைகளைப் புகுத்த முயல்வது, மாநில உரிமையைப் பறிப்பது என்பதுடன் அரசியல் சட்ட உரிமையையும் மீறுவதாகவே இருக்க முடியும்.

அதனைத்தான் தன் கல்வி நிலையங்கள் மூலம் மத்திய அரசு இப்போது செய்ய முனைப்புக் கட்டிக் கொண்டு வருகிறது. அதாவது மாநிலங்களுக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளைப் பறிக்கும் முயற்சியில் மத்திய அரசு முனைப்புக் காட்டிக்கொண்டு வருகிறது.

தமிழகத்தில் இந்திக்கு எதிர்காலமில்லை என்ற முடிவு — அரசின் கல்விக் கொள்கையோடு இணைந்த ஒன்றாகும். அப்படி இருக்க, இந்திப் பள்ளிகளைத் தம் பொறுப்பிலேயே நாடெங்கும் திறந்து நடத்துவது என்பதும், அதற்கான யோசனைகளை இந்திப் பிரசார சபை வழங்குவது என்பதும் மாநில உரிமையைக் கொல்லுகின்ற தீய நடவடிக்கைகளே ஆகும்.

ஒரு மொழியை எந்தவொரு மாநிலத்திலும் தம் இஷ்டம்போல் கொண்டுவந்து நுழைக்க மத்திய அரசுக்கு மட்டும் உரிமையை அரசியல் சட்டம் வழங்கி இருப்பது விந்தையிலும் விந்தை. அந்த விந்தை மாநிலங்களது உரிமைகளைக் கபளீகரம் செய்துகொண்டு முன்னேறி வருவதும் அபாயகரமான ஒன்றாகும்.

தமிழகத்துக்குள்ளே இந்திப் பள்ளிகளை ஏற்படுத்த முனைவதைப் போலவே கேரளாவிலும் முனைப்புக் காட்டப்படுவதை அதன் முதலமைச்சர் நம்பூதிரிபாடு வன்மையாகக் கண்டித்துவிட்டிருக்கிறார்,

தம் கல்வி நிலையங்களில் இந்திப் பயிற்சிக்கு வழியுண்டாக்குவதையும் அவர் சாடி இருப்பது வரவேற்கத் தக்கதேயாகும்,

தமிழ் நாட்டுக்குள்ளே, இப்போதே காங்கிரசார் ஒரு அமளி நிலையை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசின் இந்த எண்ணமும் நிறைவேற இடந்தரப்படுமானால், எதிர்கால அமைதி தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் வினாக் குறியாகவே நின்று விடும்!

எனவே, மத்திய அரசின் இந்த கெடுமதியை எப்பாடு பட்டேனும் தடுத்து நிறுத்தவேண்டியது தமிழக அரசின் தலையாய கடமையாகும்,

★

கேள்வி ? பதில்

1. 'கல்வித்தரம் குறையவில்லை' என்று பெரியவர்கள் எதை வைத்துச் சொல்கிறார்கள்?

தாங்கள் படித்த காலத்தின் தரத்தைக் கொண்டு சொல்லப்படுவதாகத்தான் தெரிகிறது. கல்லூரிப் படிப்புக்கும், செகண்டரி படிப்புக்கும் உறுதுணையான அடிமட்டக் கல்வி, பல்லாண்டுக் காலமாகவே பாழ்பட்டுக் கிடக்கிறது. பிரைமரி கல்வியில் செலுத்தப்படும் முழுக் கவனத்தின் எதிரொலிதான் உயர் கல்வியின் தரத்தைக் காக்கக் கூடியதாக இருக்கமுடியும். அடிமட்டத்தில் அதிக அக்கறை காட்டித் தீர வேண்டிய நிலையில்தான் இருக்கிறது கல்வி. அரசைவிட, ஆசிரியர்களின் பொறுப்பு அதிக அளவுக்குத் தேவைப்படுகிறது.

2. நகராட்சித் தேர்தல்களை காங்கிரஸ் கட்சி, பகிஷ்கரிக்கப் போகிறதா என்ன?

அப்படி யொன்றும் தெரியவில்லை, அவர்களுக் கிருக்கிற பிழைப்பே அதை வைத்துத் தானே! அதையும் பகிஷ்காரம் செய்துவிட்டு வங்கக் கடலுள் சென்று அரசியல் நடத்தப்போகிறார்கள்! நகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டாலும், படா விட்டாலும் பகிஷ்காரம் செய்வதைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்று சொல்லி இருக்கிறாரே சுப்பிரமணியம் கவனிக்கவில்லையா?

3. கழக ஆட்சியை இத்தனைத் தீவிரமாகக் காங்கிரஸ் எதிர்த்தும் அதனை மிகவும் அலட்சியப் படுத்துகிறதே கழகம், ஏன்?

இங்கே இப்போது ஆண்டு கொண்டிருப்பவர்கள் ஆங்கிலேயர்களோ, அமெரிக்கர்களோ—சீனர்களோ அல்லவே! தமிழகத்தில் பிறந்து, தமிழ்ப் பாலருந்தி, தமிழ்த் தாயின் அரவணைப்பிலிருக்கின்ற தமிழ்த் தலைவர்கள்—தக்கவர்கள் அல்லவா ஆட்சி நடத்துகிறார்கள்! இத்தனைத்தீவிரமான எதிர்ப்புக்கள்தான் எதற்கோ? 16 மாத கழக ஆட்சியில் அப்படி மக்களுக்கு என்னதான் பாதகம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது? கழக ஆட்சியின் மாண்பினால் காங்கிரஸ் என்ற ஒரு கட்சியின் அரசியல் விலை போகாமல் போய்விடும் நிலைமை உருவாகிக்கொண்டு வருகிறது, அதனால் அவர்கள் எதிர்க்கிறார்கள்—சீனர்கள் ஆட்சியை எதிர்ப்பது போல! அதை அலட்சியப்படுத்தாமல் என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்?

4. மாஜி மன்னர்களுக்குத் தரப்படும் மானியம் நிறுத்தப்பட்டால் உடனடியாக பாதிக்கப்படுபவர் யார்?

மத்திய அரசும், பார்லிமெண்டும்தான்! பல மாஜி மன்னர்கள் எம். பி. க்களாக இருக்கிறார்கள். அவர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறக்கூடும் அப்படி வெளியேறி விட்டால் மத்திய அரசின் வாழ்க்கை 'மதில்மேல் பூனை' என்ற நிலையில்தான் இருக்கும். அதனால், மானியத்தை நிறுத்தக் கூடாது என்பது நம் நிலையல்ல—மாற்று ஏற்பாடு ஒன்றைக் கண்டறிந்தே ஆகவேண்டும் என்பதுவே நம் விருப்பம்.

5. பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கப் போகிறது என்ற செய்தியில் உண்மை இருக்குமா?

இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது? பாக். வெளி விவகார அமைச்சர் அர்சாத் உசேன் இது தொடர்பான பேச்சு வார்த்தைகளை நடத்த பீகிங் சென்றிருப்பதாகச் செய்தி வந்துவிட்டதே! உலக நாடுகளில் பல போட்டி போட்டுக்கொண்டு பாகிஸ்தானுக்கு ஆயுத உதவிகள் செய்து கொண்டு வருகின்றன. இந்நிலையில், அணுகுண்டு ஆசை அதற்கு வருவதில் வியப்பில்லை. இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் லாபம் இது. மத்திய அரசின் ராஜதந்திரத்துறையின் மகத்தான தோல்விக்கு எடுத்துக் காட்டு!

6. ஆகஸ்டு 1ம் நாள் ஊர்வலம் பற்றி, ஒரு நாளேடு கழக அரசைத் தாக்கி தலையங்கம் எழுதி இருப்பது தெரியுமா?

தெரியும். செத்துப் பிழைத்தவர்கள் — செத்துக் கொண்டிருப்போருக்காக அனுதாபம் தெரிவிப்பது இயற்கைதானே!

7. சட்டங்கள் யாருக்காக யாரால் இயற்றப்படுகின்றன!

பகுத்தறிவுள்ள மனிதர்களுக்காக! பகுத்தறிவுள்ள மனிதர்களால் இயற்றப்படுன்றன என்பது உண்மையாயிருந்தும் பகுத்து அறியத் தெரியாத பலரே அதற்கு மதிப்புக் கொடுத்து வருகின்றனர். காரணம் அந்த அளவுக்கு அரசியல் பிரசாரங்கள் சட்டத்தை மதிக்கச் செய்யாத தன்மைகளை வளர்த்துக் கொண்டு வருகின்றன

8. கண்ணதாசனின் ஊர்வலம் குறித்து நீதி வீசாரணை தேவை என்று சுப்பிரமணியம் கூறுவதை எப்படி மறுக்கிறீர்கள்!

நான் மறுக்கவில்லை சுப்பிரமணியனாரின் பதிலையே தருகிறேன்; படியுங்கள். "இந்தச் சிறிய விஷயங்களுக்கெல்லாம் நீதிவிசாரணை நடத்துவது என்று ஆரம்பித்தால் அப்புறம் போலீஸ் வேலைக்கு ஆட்களே வரமாட்டார்கள்" இது சட்டமன்றத்தில் அவரே கூறியது. முதுகுளத்தூர் சம்பவம் தொடர்பாக! பதில் சொல்லும் இடத்தில் இப்போது அவர் இல்லை. அதனால் அந்தப் பதிலை அவருக்குப் படித்துக் காட்டி நினைவுறுத்துங்கள்.

9. தனி உணவு மண்டலம் என்ற நிலைமை மாற்றியமைக்கப் பட்டுவிட்டால் என்ன ஆகும்?

தமிழகமும் கேரளாவைப் போல் மத்திய அரசின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிவரும். இங்குள்ள காங்கிரசுக்காரர்களுக்கு நிறைய வேலை ஏற்படும் — உணவுப் பஞ்சத்தை எடுத்துக் காட்டிப் பேச!

10. தமிழுக்கு இந்திய ஆட்சி மொழியாகும் தகுதி இல்லையா?

தமிழுக்கு அத்தகுதி இருக்கிறதா இல்லையா என்பது இப்போதைய பிரச்னை அல்ல – இந்திக்கு அத்தகுதி உண்டா என்பதுதான்!

★

2. டெல்பி குருமாதா—காட்டும் வழி வேறு?

முன் கதை:

கிரேக்க நாட்டில் — தெசாலி மண்டலத்தை ஆண்ட லைகர் கஸ் என்பவனின் ஒரே செல்வக்குமரி அல்பாஷியா, அரண்மனைத் தோட்டத்துக் காவலாளி வேடத்தில், கெல்லாஸ் மண்டலத்து இளவரசர்கள் இருவரில் இளையவனை பெர்க்ளீஸ் என்பவனுடன் காதல் சல்லாபத்தில் இரவைக் கழித்துக்கொண்டிருக்கிருள். அதுபோது, அவர்களுக்கு அருகே ஏற்பட்ட சிறுசலசலப்புச்சத்தத்தால் அதிர்ந்துபோன அல்பாஷியா, தன் காதல் வெளிப்பட்டுப் போனதோ என்று காதலனிடம் கூறி கவலைப்படுகிருள். நம் காதல் வெளிப்படத்தான் வேண்டும்—அதுதான் நமக்கு நல்லது என்று கூறி பெர்க்ளீஸ் சிரிக்கிருன். பொழுது விடியும் வேளையில் அஞ்சிச் சிலிர்த்த உள்ளத்தோடு — சோர்ந்த மன நிலையில் அரண்மனைக்குப் போகிருள் அல்பாஷியா. இனி தன் திட்டம் நிறைவேறும் என்ற இனிய கனவோடு பெர்க்ளீஸ் பிரிகிருன்:

●

கிரேக்க நாட்டில் பல கடவுள்கள் குறிசொல்லும் கடவுளாகக் கருதப்பட்டன. ஆனல் டெல்பியிலுள்ள அப்போலா கடவுளின் குறி மிகச் சிறப்பாகக் கருதப்பட்டது. கிரேக்கத்தைச் சேர்ந்த தெசாலி நாட்டு மக்களும் கெல்லாஸ் நாட்டு மக்களும், 'பெலபோனியஸ் நாட்டுடன் சூழ்ந்துள்ள மற்றபகுதிகள் எல்லாமே டெல்பியில் தான் குறி கேட்டுப்போவார்கள். கிரேக்கத்தின் எந்த அரசகாரியமும் டெல்பியின் அனுமதியின்றி நடந்ததில்லை. கிரேக்க நாட்டின் பொது இடத்தில் அமைக்கப்பெற்றிருந்த டெல்பிக்கு, மக்கள் விழாப்போல் நாள் தோறும் திரளுவார்கள். அங்கு குறிசொல்லும் விழா நடந்து கொண்டே இருக்கும்.

டெல்பி கோயிலில் மண்டபத்தின் நடுவில், தரையில் அறையொன்று தோண்டப்பெற்று அதன் மேல்பாகம் மூடப்பெற்றிருக்கும். அதன் மூடியில் வெள்ளியால் ஆசனம் அடைத்து ஒரு மணமாகாத பெண் பூசாரி உட்கார்ந்திருப்பாள். குறி கேட்க வந்தவர்கள் அவள் எதிரே போய் வணங்கி நிற்பார்கள். கீழுள்ள அறையிலிருந்து கந்தகப் புகை மேலேவரும். அது சில வேளைகளில் பூசாரியையே மூழ்கடித்து விடும் புகைமண்டலம் எழுப்பி மண்டபம் முழுவதும் பரவிய பிறகு தான் பூசாரி பேசுவாள். அவள் பேசிவிட்டால் கடவுளே பேசிவிட்டதாகப் பொருள்!

குறிகாரப் பூசாரி இரட்டைப் பொருளிலேதான் குற கூறுவது வழக்கம். எந்தக் கோணத்திலும், எந்தக்காரணத்தைக் கொண்டும் குறி தப்பக்கூடாது என்பதற்காகப் பூசாரி இரண்டு அர்த்தங்களில் ஆருடம் கூறுவாள். வரும் பொருளுரைக்கும் அமைச்சர்கள் கூட அதற்குத் தலையாட்டிக் கொண்டு தானிருக்கவேண்டும்.

ஒருமுறை, கிரேக்கத்திற்கும் ரோமாபுரிக்கும் போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் மக்கள் திரண்டு டெல்பியின் சந்நிதானத்திற்கு ஓடினர்கள். 'கிரேக்கத்திற்கு வெற்றி கிடைக்குமா?' என்று கேட்டார்கள். "கிரேக்கர்கள் ரோமாபுரியர்கள் ஒருவரை ஒருவர் வெல்லுவர்" என்று டெல்பி குரு தேவி சொன்னுள். போரில் கிரேக்கர் வென்ருலும் ரோமாபுரியர் வென்ருலும் இந்தக் குறி பலிப்பதாக இருந்தது. இது ஏமாற்று வித்தை என்று எதிர்த்துப் பேச அப்போது கிரேக்கத்தில் ஆளில்லை—வளம் கொழித்த நாடு இவ்வாறு குருட்டு நம்பிக்கையில் சிக்கி உழன்றது.

டெல்பி மதகுரு வெளியில் வருவதில்லை. அரசர் முதற்கொண்டு அவளைத்தான் தேடிப்போகவேண்டும். அரசியல் குறித்து ஆருடம் கேட்கவேண்டியதிருந்தால் அன்று பொதுமக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள் பூண்டு டெல்பி, மன்னரும் தலை வணங்கித்தான் குறி கேட்கவேண்டும். குருவின் பேச்சுக்கு மறு பேச்சுக் கூடாது. மற்றவர்களுக்குள்ள இந்த விதி கொற்றவனையும் கட்டுப்படுத்தியது. தரணியை ஆளும் மன்னர்களையும் தட்டிக் கேட்கும் அதிகாரம் பெற்ற டெல்பி குருவுக்கான தேர்தல் மூன்ருண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பதவி நீங்கிய டெல்பி மதகுரு அந்த நேரத்திலிருந்தே ராஜாங்கத்திற்கு வரி கொடுக்கும் சாதாரணப் பிரஜையாகி விடுவாள். அன்றுவரை வரிக்கட்டி வந்த ஒரு ஏழை மகள் வெற்றி பெற்ருல் புதிய டெல்பியாக வரலாம். அந்த ஸ்தானத்தை ஆடவர் பெறமுடியாது.

அல்பாஷியாவின் தந்தை—தெசாலி அரசன் லைகர்கஸ், டெல்பிக்கு வரப்போவதாக அறிவிக்கப்பட்டது. டெல்பி குரு புத்தாடை பூண்டு, பொன்னணி சூட்டி முன் கூட்டியே ஆசனத்தில் அமர்ந்திருந்தாள். கந்தகபுகை 'குபுகுபு' வென்று மேலே வந்து கொண்டிருந்தது. சில்லரைத் தேவதைகள் என்றழைக்கப்படும் டெல்பியின் எடுபிடிகள், மன்னன் லைகர்கஸ்வந்ததும் வரவேற்று உபசரித்து மூலஸ

தானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இதயத்திலே பூத்திருந்த பெரு மகிழ்ச்சி மன்னன் முகத்திலே குளுமை வடிவில் பரவிநின்றது. அதிர்ச்சிக்கும் அச்சத்திற்கும் இடந்தராத அவனது போர் விழிகளில் நம்பிக்கை ஒளி பிரதிபலித்தது.

சில விநாடிகளுக்குப் பிறகு மன்னன் தங்கியிருந்த மண்டபத்திற்குள் ஒருவித வாசனைப்புகை நுழைந்தது. ஒரு இளம் பூசாரி மன்னனுக்கு அருகில் வந்து, "குறி கேட்கும் காலம் வந்துவிட்டது, மன்னர், தேவி அறைக்குப்போகலாம்" என்றார். லைகர்கஸ் பயபக்தியுடன் டெல்பி குருவின் தனி அறைக்குள் நுழைந்தார்.

"தெசாலி நாட்டின் மன்னன் வந்திருக்கிறேன் குரு தாயே!"

"லைகர்கஸ் வந்திருப்பதாக நாம் அறிவோம். தெசாலியில் சுபிட்சத்திற்குக் குறைவில்லை என்று சந்நிதானம் கேட்டுப் புளங்காங்கிதம் அடைகின்றது!"

"நான் கொடுத்து வைத்தவன் மாதாவே! வரவேண்டிய இடத்திலிருந்து வாழ்த்துப் பெற்றேன்!"

"மகுடம் சூட மகனில்லையே என்ற கவலை! இல்லையா மன்னா?"

"ஆம் தேவி! ஆனால் அந்தக் குறை தீர வழியொன்று கண்டு ஆறு திங்கள்களுக்கு மேலாகிவிட்டது. அனுமதி கோரவே அடியேன் வந்திருக்கிறேன். எனக்கு வழிகாட்டி, தெசாலி தேசத்திற்கு மேலும் புத்தொளி தரவேண்டுகிறேன்" லைகர்கஸ் கவலை படிந்த குரலில் கண் கலங்கப் பேசினான்.

"சிக்கலைத் தெரிவி லைகர்! அவிழ்க்கமுடிந்தால் சரி; இல்லையேல் அபயம்கொடுப்போம். டெல்பியால் ஆகாதது உண்டா என்ன?"

"எனக்கொரு மகள் இருக்கிறாள். பெயர் அல்பாஷியா. பேரழகி. கல்வி கற்று ஞானம் பெற்றவள். அவளுக்கு மிக விரைவிலே மணவிழா நடத்தத் தீர்மானித்துவிட்டேன். அனுமதி கேட்கவே ஓடோடி வந்திருக்கிறேன். இந்தப் புனித மதத்தின் மேலான ஆதரவு தேவை குருவே!"

"லைகர்கஸ்! தெசாலி தேசம் வாரிசு இல்லாமல் தத்தளிக்கும் கட்டத்தில் நிற்கிறது. அருமை மகள் அல்பாஷியாதான் அரசபாரத்தை ஏற்க வேண்டியவளாகிறாள். அவளுக்குத் தக்க துணைவன் கிடைப்பது துரிதத்தில் நடக்கும் காரியமாகுமா?

"உண்மைதான் மறுக்கவில்லை. அரண்மனை ரகசியங்கள் அம்பலத்திற்கு வந்துவிட்டால் அரசுக்கு அவமரியாதை ஏற்பட்டுவிடாதா?"

"விளங்கச் சொல்! அரண்மனையில் என்ன நடந்துவிட்டது? உலகில் எந்த ரகசியமும் இதுவரை காப்பாற்றப்பட்டதில்லை. ரகசியங்களை உடைத்துப் பொடியாக்கி ஊரெங்கும் நாடெங்கும் பரப்புவதிலே காலதேவன் கைதேர்ந்தவன். மனதை அலட்டிக்கொள்ளாதே! தீர்ப்பதற்கு மார்க்கமில்லாத மனக் கவலையே இல்லை!" கந்தகப் புகைக்குள்ளே இருந்த டெல்பி, ஜீரணிக்கமுடியாத தத்துவங்களைக் கொட்டினாள்.

"இருபது நாட்களுக்கு முன் காட்சி ஒன்று கண்டேன். அன்றிலிருந்து நேற்றுவரை எனக்கு நிம்மதி இல்லை. இன்று காலை தீர்க்கமான முடிவுக்குப் பின்னர் புதிய தெம்புடன் இவ்விடம் வந்திருக்கிறேன்" பதிலிறுத்தான் லைகர்கஸ்

"கனவில் கண்டதை வைத்துக் குழம்பித் தவிக்கிறாயா? ஏதாவது பரிகாரம் தேடினால் போகிறது! இதற்கா மனச்சோர்வு?"

"இல்லை குருதேவி, கண்ணால் பார்த்தேன். குமாரி அல்பாஷியா அந்நிய நாட்டு இளைஞனுடன் அரண்மனைப் பூங்காவில் இன்பத்தில் திளைத்திருந்ததைக் கண்டேன். எனக்கு அந்தப்புரத்திலிருந்து ரகசியத் தகவல் கிடைத்ததின் பேரில் தோட்டத்திற்குச் சென்று அந்தக் கோலத்தைப் பார்த்தேன்" என்றான் லைகர்கஸ்.

டெல்பிக்கு முகம் சிவந்தது. பல்லைக் கடித்துக் கொண்டே பேசினாள். வார்த்தைகள் வரவில்லை.

"லைகர்கஸ்! உன் அரசுக்கு—அந்தஸ்துக்குப் பழுது! நீ தப்ப நினைத்ததில் தவறில்லை மகனே! ஆவன செய்! அதுவும் விரைவிலே செய்!... லைகர்!"

"அன்னையே! அடியேன் தயாராகிவிட்டேன்? ஆனால் ஒரு விண்ணப்பம்! காதல் சாகாதது? அதில் சம்மந்தப்பட்ட ஜீவன்கள் வாழும் வரை அவர்களின் உள்ளங்களில்

திடீர் திடீரென்று அந்த எண்ணம் வெடித்துக்கிளம்பும். அதனால் நான் ஒரு துணிகரமான முடிவுக்கு வந்து விட்டேன் தாயே!''

''என்ன அது! கள்ளக் காதலனைத் தீர்த்துக் கட்டிவிட உத்தேசித்துவிட்டாயா?''

''இல்லை; களவையே கற்பாக்கி விட்டால் பயத்திற்கு இடமிருக்காது என்பது அடியேன் அபிப்பிராயம்! தங்கள் சித்தம் எப்படியோ?''

''புரியச்சொல் புரவலா!''— டெல்பி திரும்பக் கேட்டாள்.

''அல்பாஷியாவின் கள்ளக் காதலனுக்கே அவளைத் திருமணம் செய்விக்க முடிவு செய்துவிட்டேன் அன்னையே!''

''என்ன! அல்பாஷியாவுக்கும் யாரோ ஒரு அனாதைக்குமா திருமணம்! கேவலம்! மகாகேவலம்! உனக்கென்ன பித்தக்கோளாறு? மறுமுறை பேசாதே! மன்னர் குலத்தின் திருமுறை கெட்டுவிடும்'' டெல்பி கடிந்து பேசினாள்.

லைகர்கஸ் மன்னனுக்குத் திகில் பிடித்துவிட்டது.

''தெய்வமே, அவனைத் தவிர வேறு நல்லவர்கள் என் கருத்துக்குப் படவில்லை, என்னை மன்னித்து எனக்கு அனுமதிதர வேண்டும்!''— மன்றாடத் தொடங்கினான் லைகர்கஸ்.

''லைகர்! டெல்பியின்குறுக்கீட்டை மீறி தெசாலி கெட்டால் யாருக்கு நஷ்டம் என்பதை யோசித்துப்பார். உன் புத்திரியின் இளமைத் துடிப்பின் கோர விளையாட்டுக்கு நீயா இரையாகவேண்டும்! அபகீர்த்தி மன்னா அபகீர்த்தி! கிரேக்கத்தில் அரசிளங் குமரர்களுக்கா பஞ்சம்?— டெல்பி குரு உரத்தக்குரலில் பேசினாள்.

''எத்தனையோ பேர் இருக்கிறார்கள்! அவர்கள் அனைவரும் அவர்களின் நாட்டுக்கு மகுடபதிகளாக வரவேண்டியவர்களாக இருக்கிறார்களே!'' என்றான்—லைகர்கஸ்.

டெல்பி சற்று தணிந்தாள். இருவருக்குமிடையே மௌனம் நிலவியது. மீண்டும் டெல்பி தொடங்கினாள்.

''கெல்லாஸ் நாட்டு வேந்தன் கிளிஸ்தெனீசின் இரண்டாவது குமாரன் பெர்க்ளீஸ் இருக்கிறான். அவனுக்குக் கொடுத்தால் குடிமுழுகிப் போய்விடுமா? மலைத்தொடர் சம்மந்தமாக இருவருக்கும் ஏற்பட்ட

தூது செல்லாயோ!

வண்ண மலர்ச் சோலை சென்று,
வாசம் பெறும் காற்றே!
வழங்கு மனம் உனக்கிருந்தால்?
வந்து ஆங்கே வீசு!
கொஞ்சி மகிழ் வஞ்சி ஏனோ
அஞ்சிச் சென்று விட்டாள்;
அஞ்சியவள் சென்றே யெந்தன்,
நெஞ்சில் நெருப் பிட்டாள்!
நஞ்சு உள்ளம் கொண்ட மக்கள்
நாட்டில் வாழும் போது,
பிஞ்சு உள்ளம் கொண்ட அவள்,
எங்குச் சென்று வாழ்வாள்

எந்தன் மனம் வாட விட்டு
எங்குச் சென்ற போதும்,
சுகந்த மணம் வீசி அவள்,
துயர் களையச் செல்வாய்!
ஆவல் கொண்டு அழகைக் கண்டு
ஏவல் செய்ய என்றும்,
சூளுரைத்த எந்தன் நெஞ்சு
துடிக் குதென்று சொல்லு!
வண்ண மலர்ச் சோலை சென்று
வாசம் பெறும் காற்றே!
வழங்கு மனம் உனக்கிருந்தால்?
வந்து ஆங்கே வீசு.

—வரதராமு.

மனத்தகராறும் தீர்ந்தது போலாகும்'' என்றாள் பெண் குரு.

அல்பாஷியாவை பெர்க்ளீசுக்குக் கொடுத்து, பெர்க்ளீசிடம் தெசாலியை ஒப்படைப்பதிலே சந்நிதானத்திற்கு திருப்தி என்றால் எனக்குத் தடையில்லை!' என்றான் லைகர்கஸ் குறும்பாக!

''என்ன குறை வந்துவிடப் போகிறது! நான்தானே மணமகனையே காட்டினேன்!'' என்று பெருமையாகச் சொன்னாள் டெல்பி.

லைகர்கஸ் தன்னைமறந்து பலமாகச் சிரித்துவிட்டான். டெல்பி திகைத்தாள்.

''லைகர்! என்ன சிரிக்கிறாய்? அல்பாஷியாவுக்கு ஏற்றவனில்லையா பெர்க்ளீஸ்?''

''இல்லை... இல்லை......''

''என்ன! இல்லை! லைகர்கஸ்! பாம்புடன் விளையாடாதே!''

''மன்னிக்கக் கோருகிறேன். அல்பாஷியா காதலித்தது பூங்காவில், ஓடி விளையாடியது—பெர்க்ளீசுடன் தான் என்பதைச் சொல்ல வந்தேன்'' என்றான் அமைதியாக லைகர்கஸ்.

''பெருமகிழ்ச்சி! கெல்லாஸ் தலைவன் கிளிஸ் தெனீஸ் அடுத்த கிழமை இங்கு வருவதாக அறிவித்திருக்கிறார். எல்லாம் இனிது நடக்கட்டும். நீ போகலாம்!'' என்று லைகர்கசுக்கு விடைகொடுத்தாள் டெல்பி. லைகர்கஸ் காணிக்கையாக நூறு பொற்காசுகளைப் படைத்தான். குந்தகப் புகைக்குள் புதையுண்டு கிடந்த டெல்பிச் சாமியார் அந்தக் காசுப் பையை எடுத்துவைத்துக் கொண்டார். ஆனால் அதை அவர் எப்படி எடுக்கிறார் என்று மற்றவர்களுக்குத் தெரியாது. அவரைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் வெண்புகை அவருடைய உருவத்தைக்கூட மறைத்து நிற்கிறது!

தெசாலிவேந்தன் லைகர்கஸ்டெல்பியின் பூரண ஆதரவு கிடைத்து விட்டது என்ற பரவசத்தில் உச்சி குளிர்ந்து போனான். ஆனால் டெல்பி உண்மையிலேயே ஆசி கூறினாளா? இல்லை! கெல்லாஸ் தேசத்தில் வாழும் அவளுடைய காதலன் டிராக்கோ — பெர்க்ளீசின் உடன்பிறந்த அண்ணன் தன்னை ஏற்றுக்கொள்ளாது உதறித் தள்ளியதற்கு அவனைப் பழிவாங்க அரியதோர் வாய்ப்புக் கிடைத்துவிட்டதாக எண்ணி அவள் உவகையுற்றாள். அண்ணனுக்கும் தம்பிக்கும் பகை மூட்டிவிட அந்த யுவதியின் மூளை வேலை செய்தது. ஆருடம் கூறும்கோவில் குருவின்வேடத்தில் அரசக் குடும்பத்திலே அற்புதங்கள் விளைக்கத் துணிந்துவிட்டாள்!

அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்க விரும்புவன்—அறவழிகளைப் பற்றியெல்லாம் கவலைப்படக்கூடாது!

ஒழுங்கீனம் வளர்ந்துள்ள இடத்தில் ஒழுக்கமுள்ளவன் நிலைத்து வாழமுடியாது; அதனால் அதிகார பீடத்திலுள்ளவர் சூழ்நிலைக்கேற்ப வாழக் கற்கவேண்டும்!

அரசியல் வித்தகன் மாக்கியவெலி

"தீமைகள் செய்தாவது சில நன்மைகளை நிலைநிறுத்த முடியுமானால் தீமைகளைச் செய்வதில் எவ்வித தவறும் இல்லை. நல்ல லட்சியங்களை அடைய நல்ல வழிகளையே கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என்று துணிந்து சொன்னன் இத்தாலிய நாட்டு அரசியல் வித்தகன் மாக்கியவெலி (Machiavelli)

ஒல்லியான கரிய உருவம்—ஒளி பொருந்திய கூரிய விழிகள் இவைதான் மாக்கியவெலியின் உருவம் — அவன் வெறிபிடித்தவன்போல் எப்பொழுதும் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பான் — அவன் எழுதும்போது அவனுடைய விழிகள் மேலும் ஒளியை உமிழுமாம்!

1469–ஆம் ஆண்டு மே மாதம் 13–ஆம் நாளன்று இத்தாலியில் உள்ள ஃபிலாரன்ஸ் நகரில் பண்பும் படிப்பும் நிறைந்த ஒருவருக்கு மகனாய்ப் பிறந்தார் மாக்கியவெலி. இளமையில் லத்தீன் இலக்கியங்களையும், ரோமானிய வரலாற்றையும் ஊன்றிப் படித்து தன் எண்ணங்களை கட்டுரைகளாக வடித்தார்.

சாதாரண எழுத்தாளனாக இருந்து படிப்படியாக வளர்ந்து ஃபிலாரன்ஸ் ராஜ்யத்தின் சார்பாக அரசியல் தூதுவனாக வெளிநாடு செல்லும் பேறு பெற்றார். வெளிநாட்டுப் பயணம் அவருக்கு நிறைந்த அனுபவத்தைத் தந்தது. அரசியல் தலைவர்களோடும், அரசாங்க அதிகாரிகளோடும் பழகிய தன் பயனாய்ப் புதியதோர் அரசியல் தத்துவம் (Poletical Philosophy) மாக்கியவெலியின் மனதில் எழுந்தது. அதனையே பிற்காலத்தில் தி பிரின்ஸ் (The Prince) என்ற நூலாக எழுதினார். மாக்கியவெலி ஒருசமயம் போர்ஜியா (Borgia) என்ற பிரபுவைக் கண்காணிக்கும் பணியில் அமர்த்தப்பட்டார். அப்பிரபு எதைச் செய்தாவது தன் அதிகாரத்தை நிலைநிறுத்த எண்ணினர். குறைய பேசி நிறைய சாதித்தவர் இப்பிரபு. இந்த பண்பால் போர்ஜியா மாக்கியவெலியின் உள்ளத்தில் அழியா ஓவியமாகப் பதிந்துவிட்டார்—இவரைத்தான் தமது நூலான பிரின்ஸ் (The Prince)ல் சித்திரித்துள்ளார். இவர் எழுதிய வேறு நூல்கள் "மாந்திர கோலா" என்ற நாடகம் "கிளசியா" என்ற நாவல். "போர்க்கலை" என்ற நூல். "ஃபிலாரன்ஸ் நாட்டு வரலாறு" எனும் "வரலாற்று நூல்"

அரசியல் பித்தலாட்டங்களை ஆராய்ந்து அவற்றை முறையாகவிதிகளாய்ப்பிரித்துக்காட்டிய மாக்கியவெலியின் வாழ்க்கையை சரியாக வகுத்துவிட்டாள் மாரியெட்டா கார்சினி (Marietha Corsini) இவளை 1502ல் மணந்துகொண்டார்.

"மாக்கியவெலி" என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பித்தலாட்டக்காரன் என்ற ஒரு பொருள் உண்டு ஆங்கில அகராதியில். இத்தாலி ஒரு நாடாக இணைய வேண்டும்; பலம் பொருந்திய படைகளால் பாதுகாக்கப்படவேண்டும் என கனவு கண்டார் மாக்கியவெலி. இவருடைய இலட்சியக் கனவுகள் 19 ஆம் நூற்றாண்டில் தான் நிறைவேறின.

"அரசியல் நெருக்கடிகளைச் சமாளிக்கவிரும்புகின்றவன் அறவழிகளைப்பற்றி எல்லாம்கவலைப்படக்கூடாது என்பது மாக்கியவெலியின் சித்தாந்தம்.

மக்கள் நல்வாழ்வு வாழ சில படுகொலைகளை அரசியல் தலைவர்கள் செய்தாலும் நியாயமானதே என்று முழங்கிய மாக்கியவெலியின் சிலையை வடிக்க எண்ணிய மைக்கலேஞ்சலோ (Michelangelo) "உங்கள் உருவத்தைக் கையில் புத்தகத்தோடு வடிக்கட்டுமா?" என்று கேட்டபோது, மாக்கியவெலி சிரித்துக்கொண்டே "கையில் புத்தகம் வேண்டாம்; வாள் இருக்கட்டும்" என்றாராம்.

ஒழுங்கீனம் வளர்ந்துள்ள இடத்தில் ஒழுக்கமுள்ளவன் நிலைத்து வாழவே முடியாது. ஆகவே அதிகாரபீடத்திலுள்ளவன் தன் சூழ்நிலைக்கேற்ப வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"அன்பினால் ஆள்வதைவிட பயத்தினால் ஆள்வதே சிறந்தது. அன்பு பிறன் நினைத்து உன்மீது செலுத்துவது. பயம் நீ பிறனிடம் உண்டாக்குவது. ஆகவே உன்னால் உண்டாக்கப்படும் பயமே நம்பிக்கையான ஆயுதம்."

இப்படிபயங்கரமானதத்துவங்களைப்போதித்த மாக்கியவெலி 1520ல்மாண்டுபோனான். கடைசிக் காலத்தில் அவன் சில ஆண்டுகள் சிறைக்கூடத்திலும் கழித்தான்.

மாக்கியவெலியின் கொள்கைகளைப் பற்றி கருத்துவேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் அவன் ஒரு தலைசிறந்த அரசியல் மேதை என்பதைப்பற்றி கருத்து வேற்றுமைகள் இருக்க முடியாது.

—தே. சுப்புசாமி

துள்ளி வரும் பகை தூளாகும்!

அன்புள்ள நண்பா!

1942-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எட்டாம் நாளும், அதற்குப் பிறகும் இந்தியத் துணைக்கண்டமே ஸ்தம்பித்துப் போயிற்று. உலகப் போர், அகிலத்தின் உச்சி ரோமத்தைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டிருந்த வேளை அது. சூரியனே அஸ்தமிக்காத பேரரசு என்று வர்ணிக்கப் பட்டுக்கொண்டு வந்த பிரிட்டிஷ் பேரரசு, போரில் பல இடங்களில் தோல்வியையே தழுவிக் கொண்டு வந்த கட்டம். அதாவது இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்திருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், உலகத்தின் மத்தியில் ஒரு 'கிடுக்கித்'' தாக்குதலுக்கு ஆளாகி விழி பிதுங்கிக் கொண்டிருந்த சமயம் அது.

அந்த வேளையில்தான் இந்தியாவும் தன் சுதந்திரப் போரை தீவிரப்படுத்தியது. போராட்டத் திட்டங்கள் "கிடுக்கி" முறையிலேயே வகுக்கப்பட்டன. இந்தியச் சுதந்திரத்தின் வரலாற்றுப் பகுதியில் காந்தியடிகளுக்குக் கணிசமான ஒரு பகுதி நிச்சயம் உண்டு.

என்றாலும், காங்கிரசுக் கட்சியின் போராட்டங்கள் காரணமாகத்தான் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கப் பட்டதா? என்பது இன்னமும் உலக வரலாற்றாசிரியர்களது வினாவாகவே இருந்துகொண்டிருக்கிறது.

உலகத்தின் பல பகுதிகளிலும், தனக்குள்ள தொல்லைகளைக் குறைத்துக்கொண்டு, தன்னைத் தானே காத்துக்கொள்ள வேண்டிய ஒரு கடுமையான நிர்ப்பந்தம் காரணமாக இந்தியாவில் தனக்குள்ள பிடியைத் தளர்த்திக்கொள்ள பிரிட்டிஷ் முன்வந்தது—என்றுதான் பிரிட்டிஷ் பாராளுமன்ற நடவடிக்கை ஏட்டிலிருந்து சில உண்மைகளை நாடு அறிகிறது.

போர்க் கால நெருக்கடியால், தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள வேண்டிய நெருக்கடியை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சந்தித்துவிட்ட பேரபாயம் காரணமாக, இந்திய ஆட்சி உரிமை கைமாற்றப்பட்டது என்பது மறுக்கமுடியாத காரணமாக இருக்கின்றவரையில், இந்தியத் துணைக்கண்டத்தின் சுதந்திரப் பிதாக்களாக எந்த ஒருவரையும் நாடு மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதென்பது இயலாத ஒன்றாகும்.

காங்கிரசுக் கட்சி—சுதந்திரத்துக்காகப் போராட்டங்கள் நடத்தியதுண்டு. அத்தகைய போராட்டங்களில் ஒன்றுதான் 1942-ம் ஆண்டு நிகழ்த்தப்பெற்ற ஆகஸ்டுப் போராட்டம்.

இந்த ஆகஸ்டுப் போராட்டம்கூட, காங்கிரஸ் செயற்குழு கூடி திட்டம் வகுத்து நடாத்தியதல்ல.

எட்டாம் நாள் நள்ளிரவு, காந்தியடிகள் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தி காற்றிலும் கடிதாகப் பரவப் பரவ—அது பரவிய திசையெங்கும் தீபோல்—புயல்போல் குழப்பங்களும், கலவரங்களும் பரவத் தொடங்கின.

இந்த கலவரங்களுக்குப் பெயர்தான் ஆகஸ்டுப் போராட்டம் என்பது. நாடெங்கும் நாசவேலைகள் கண்மூடித்தனமாக நடத்தப் பெற்றன.

அரசுக் கருவூலங்கள் கொள்ளையிடப் பெற்றன. இரயில்கள் தடம் புரட்டி விடப்பட்டு தீக்கிரையாக்கப் பட்டிருக்கின்றன. அஞ்சலகங்கள் அக்கினி வாய்ப்பட்டதுண்டு. தந்திப் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டு செய்திப் போக்குவரத்தையே சீர்குலைத்துவிட்டது கலவரம்!

தங்கள் உயிரினும் மேலான தலைவர்கள் சிறைப் படுத்தப்பட்டார்கள் என்ற செய்தியின் எதிரொலியாக நாடெங்கும் இதுபோன்ற வன்முறைகள் நடைபெறத் தொடங்கின.

அப்போதைய பிரிட்டிஷ் அரசு—இதற்கு ஆகஸ்டுப் போராட்டம் என்று அல்ல— ஆகஸ்டுக் கலவரம் என்றே பெயரிட்டு அழைத்தது.

சிறை மீண்டுவந்த நேரு பெருமகனார்கூட, ஆகஸ்டுக் கலவரங்களுக்கு நானே பொறுப்பு ஏற்கிறேன் என்று பெருமிதத்தோடு சிறைவாயிலிலேயே கூறியதாகச் செய்திகள் உண்டு. அதாவது சுதந்திரப் போரின் ஒரு எதிரொலியை கலவரம் என்றே ஒப்புக்கொள்கின்ற அளவுக்கு அன்று நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன.

அந்த ஆகஸ்டுக் கலவர நேரத்தில்,

மக்களும் அரசும் ஒருமுகமாக ஸ்தம்பித்துப் போனதுண்டு.

அந்த ஆகஸ்டுக் கலவரம் சுதந்திரத்தின் பேராலே நிகழ்த்தி முடிக்கப்பட்டது. அந்தக் கலவரத்தில் ஈடுபட்டோர் காங்கிரசுக்காரர்கள் மட்டுமே அல்ல.

பொதுமக்கள்
வணிகர்கள்
தொழிலாளர்கள்
விவசாயிகள்
அலுவலர்கள்

என்று சமூகத்தின் அனைத்துப் பகுதியும் ஒருமுகமாக ஈடுபாடு கொண்டது. எனவே ஸ்தம்பித நிலை தோன்றியது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் 1942-ம்

ஆண்டு ஆகஸ்டு கலவரம் திட்டமிடப்பட்டதல்ல— திடுமென விளைந்தது.

வெளி உலகோடு போர்க் காரணமாகத் தவித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், தன் ஆதிக்கத்திலிருந்த ஒரு நாட்டுக்குள் இதுபோன்ற பயங்கரமான ஒரு நிலை—இருதலைக் கொள்ளி நிலை—போரில் தன் முழுச் சக்தியையும் பயன்படுத்தத் தடையாக இருக்கும் ஒரு நிலை.

இதனைத் தவிர்த்துக் கொள்ளும் ஒரு ஏற்பாடாகத் தான் இந்தியா விடுவிக்கப்பட்டது — விடுதலை எனும் பேரால்! அதாவது காங்கிரசின் போராட்டங்கள் மட்டுமே இந்தியாவின் விடுதலையைப் பெற்றுத் தந்துவிடவில்லை. போர் போன்ற உலக நெருக்கடிதான் பெரும் காரணமாக இருந்திருக்கிறது.

ஆனாலும், சுதந்திரத்திற்குப் பிறகு—காங்கிரசுத் தலைவர்களால் கூறப்பட்டதை இந்திய நாட்டு மக்கள் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார்கள்—அதுதான் சுதந்திரம் பெற்றுத் தந்தது என்பதாக! முன்னின்று போராட்டம் நடத்திய உண்மை, எந்த சக்தியாலும் மறைக்கப்பட்டு விடமுடியாது அன்றோ! அதனால் ஏற்கப்பட்டது!

1947-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 14-ம் நாள் நள்ளிரவு மணி 11-59 உடன் ஆங்கிலேய ஆதிக்கத்தின் அதிகாரம் கைமாறிப் போய்விட்டது. இந்தியர்கள் என்று கூறப்படும் வடவர் சிலரது கைக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டுவிட்டது. இப்போது இது சுதந்திர இந்தியா! சுதந்திரக் குடியரசு!!

* * *

நண்பா! 1968-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19-ம் நாள்.

தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் மாங்கல்யமிழந்துவிட்ட ஒரு கட்சி இருக்கிறது என்றால் அது தான் காங்கிரஸ் என்று, கருவில் உள்ள சிசுகூட பதில் கூறும்! அந்தக் காங்கிரஸ் கட்சி நீண்ட நெடும்பயணம்—கவியின் மொழியில் கூறவேண்டுமானால், பெரும்பயணம் நடத்தி வந்துவிட்டதன் காரணமாக இளைஞர் காங்கிரஸ் என்பதாக ஒன்று துளிர்விட்டு வந்துகொண்டிருக்கிற நேரம்.

இறந்தவர்களை இருப்பவர்கள் சுமப்பதுபோல் — செத்தவர்களுக்காக சாகப் போகிறவர்கள் அழுவது போல் —தமிழ் நாட்டுக் காங்கிரசுக்குப் புத்துயிர் ஊட்டும் ஒரு காரணத்தை இதயத்தில் நிரப்பிக்கொண்டு, இளைஞர் காங்கிரஸ் என்ற நிறுவனத்தின் சார்பில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்தக் கட்சிக்காக உள்ள ஒரு நாளிதழில்! ஆமாம்! நவசக்தியில்!!

ஜூலை 19-ம் நாள்தான் என்று நினைக்கிறேன். ஒரு செய்தி வந்திருந்தது.

> "1968-ம் ஆண்டு ஆகஸ்டு முதல்நாள் சென்னை நகரமே ஸ்தம்பிக்கும் போராட்டம் நடைபெறப் போகிறது."

> அன்று நடை பெறும் புதுமுறைப் போராட்டத்தால் நகரமே கதிகலங்கப் போகிறது

இந்த அறிவிப்பைக் கொடுத்திருந்தவர் யார் தெரியுமா?

> உலகத்தில் எப்படி வாழ்வது என்பது தவிர, மற்றவை அனைத்தும் அறிந்த ஒரு வரால்!

ஆமாம் நண்பா! கவி கண்ணதாசன் என்பவரால்! அவரே தலைமையேற்று நடத்த விருப்பதாகக்கூட அறிவித்திருந்தார்!

ஜூலை 19க்குப் பிறகு நடைபெற்ற பல விளக்கப் பொதுக்கூட்டங்கள் மூலம், அன்று நடைபெற்ற ஆகஸ்டுப் போராட்டத்தின் தொடர்பே இது என்று விளக்கப்பட்டது.

> அன்று ஆங்கிலேயரை எதிர்த்தது-சுதந்திரத்துக்காக!

> இன்று?

> நம்மை எதிர்ப்பது! இழந்த ஆட்சியைப் பற்றிக்கொள்வதற்காக!

இதிலே அன்றைய போராட்டத்தின் தொடர்பு எந்த அளவு இருக்கிறது? நல்லோர் மனம் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

பழைய போராட்டத்தின் தொடர்பு என்றால் வன்முறைகளைச் செயல்படுத்தியதில் மட்டும்தான் என்பதையும் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளவேண்டும்.

போராட்டம் நடைபெற்று முடிந்தது. போராட்டம் என்பதற்கு ஊர்வலம் என்றொரு பொருளும் உண்டு; குழப்பம், கலவரம் என்றும் எப்படி வேண்டுமானாலும் பொருள்கொள்ளலாம். அதாவது ஆகஸ்டு முதல் நாள் ஒரு ஊர்வலம் நடைபெற்றது. ஆமாம்! போராட்டம் நடைபெற்றது.

> சென்னை நகரமே ஸ்தம்பித்துப் போகும் போராட்டம் நடத்தப்பட்டது.

> மக்கள் கதிகலங்கிப்போகும் போர்! ஆட்டம் நடத்தி முடிக்கப்பட்டது!

இருபதாம் நூற்றாண்டின் இயேசுவாக—புத்தராக—வள்ளுவப் பெருந்தகையாக வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கும் அறிஞர் பெருமகனார் அண்ணா அவர்களது கையில் போலீசுத்துறை கொடுக்கப்பட்ட பின்பு காங்கிரசுக்காரர்கள்—

> போலீஸ்காரர்கள் கையில் வளையல் மாட்டப்பட்டுவிட்டது;

என்றும்,

> போலீசுக்காரர்களுக்கு சேலை கட்டிவிடப்பட்டுவிட்டது

எனவும் வருணித்தவர்கள், ஆகஸ்டு 1 ம் நாள் நடத்தி முடித்த கதிகலங்கும் போராட்டத்துக்குப் பிறகு,

> அடக்குமுறையாளர்களாக—
>
> அராஜகவாதிகளாக—
>
> தடித் தம்பிரான்களாக—

மாறிப்போய்விட்டார்களாம்!

காங்கிரசுக்காரர்களது வெங்கொடுமைகளை ஐயோ பாவம்! என்ற அன்னை உள்ளத்தோடு ஏற்று ஒதுக்கித் தள்ளியபோது, கைதுசெய்து, காவலிலிட்டுத் தம்மை பெரிய மனிதர்கள் ஆக்கிவிடமாட்டார்களா? என்று ஓலமிட்டவர்களே,

> நகரை ஸ்தம்பிக்கச் செய்ய எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைக்காக—

> கதிகலங்கச் செய்வதைத் தடுத்து நிறுத்த மேற்கொண்ட முறைகளுக்காக

போலீசார் அடக்குமுறையாளர்கள்! அராஜகவாதிகள்! தடித்தம்பிரான்கள்! எனப் பெயர் சூட்டுகிருர்கள்.

ஸ்தம்பிக்கச் செய்யும்—கதிகலங்கச் செய்யும் போராட்டம் என்று மேடையேறி முழங்கிய நேரத்திலேயே—என்ன நடைபெறவேண்டும் என்பது இதயத்தில் கருத்தரிக்காமலா இருந்தது?

> போராட்ட முறை என்ன என்பது பற்றி இப்போது அறிவிக்கமாட்டேன்; அன்றுதான் அறிவிப்பேன்!

என்று கூறியபோது, நெஞ்சுக்குள்ளே திட்டம் உருவாகாமலா இருந்தது?

அன்றைய ஆகஸ்டுப் போராட்டத்தின் தொடர்புதான் இது என்று தந்த விளக்கங்களின்போது ''ஆகஸ்டுத் தினம்'' பற்றி அறிந்துகொள்ளப்படாமலா இருந்தது?

தலைவர்கள் கைது செய்யப்பட்டதன் எதிரொலியாக விளைந்த விளைவுகளை நேருவே, கலவரங்கள்தான் என்று கூறி ஒப்புக்கொண்டு, விட்டபின்னரும், ஆகஸ்டுப்போராட்டத்தின் தொடர்புதான் என்று கூறுவது எந்தப் பொருளில்?

காங்கிரசின் வரலாற்றை அறியாதவர்கள் நடத்திய போராட்டம்! என்பதனுலா? அல்லது இந்த இருபதாண்டுக் காலத்தில் மக்கள காங்கிரசை மறந்ததுபோல் ஆகஸ்டு போராட்டம் என்பதனையும் மறந்துவிட்டிருப்பார்கள் என்ற மமதையாலா?

மதுமேலே இருக்கிறது—நான் மேலே போகத் துடிக்கிறேன் என்று கூறிவிட்டு, மேலே போய்விட்டு வந்ததாலா? எதனுல் தொடர்பு படுத்தினுர்கள்?

ஆகஸ்ட் முதல் நாள் போராட்டம்—ஒரு ஊர்வலம் நடத்தி முடித்ததோடு சரி! 4-ம் நாள் ஒரு ஊர்வலம் நடைபெற்றது—மௌன ஊர்வலம்! இது எதற்கு?

ஆகஸ்டு கலவரத்தைத் தொடர்ந்து நடத்தியவர்களுக்குக் கண்டனம் காட்டியா? அதில் விளைவித்த வெங்கொடுமைகளைச் சாடியா?

ஆகஸ்டு 1-ம் நாள் கலவரம் நிகழ்த்தப் போவதாக பகிரங்கமாக அறிவித்துவிட்டு, நடத்தி முடித்திருக்கிருர்கள். அதிலே நடத்தப்பட்ட போலீஸ் தடியடியால் சுமார் 300 பேர் வரை காயமடைந்திருக்கிருர்கள் என்பதலிருந்து, தடியடி பயங்கர அளவை எட்டி இருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டுதான தீரவேண்டும!

சேலை கட்டிக்கொண்டு, கரங்கள் கட்டப்பட்டிருந்த போலீசாரின் தடியடி அந்த அளவுக்கு மிகுந்திருந்தது என்ருல்—

> கிடு கிடு போராட்ட ஊர்வலத்தில் வந்த காங்கிரஸ் குண்டர்கள்—தடியேந்தி வந்த தடியர்களின் மிருகத்தனம் எந்த அளவுக்கு மிகுந்திருக்கவேண்டும்?

4-ம் தேதி அமைதியே உருவான ஊர்வலம் நடத்த முடிந்தவர்களுக்கு முதல் நாள் ஏன் அப்படி நடத்த முடியாமல் போனது?

> 4-ம் நாள் அறிவிப்பு அமைதி ஊர்வலம் என்பதாக!
>
> முதல் நாள் போராட்ட அறிவிப்பு பயங்கரப் போராட்டம் என்பதாக!

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஜூலை மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
'காஞ்சி'

அறிவிப்பு எப்படியோ, அப்படித்தான் போராட்டங்களும் நடைபெற்று முடிந்திருக்கின்றன.

4-ம் தேதி ஊர்வலத்தை நடத்திச் சென்றவர்களுக்குள்ள கடமை, பொறுப்பு அப்படி!

முதல் நாள் நடத்தியவர்களின் கடமை, பொறுப்பு அப்படி!

அறிவிப்புக் கொடுத்தவர்கள், கொடுத்த முறைப்படி நடத்தி முடித்தார்கள்!

தடையை மீறுவோம்! தாண்டிக் குதிப்போம் என்று தாவித் தாவி பேசியவர்களது தாவுதலுக்கு வேலை வேண்டுமே என்பதற்காகக் கிளர்ந்த வன்முறைகள்தான் தடியடியை உண்டாக்கி விட்டிருக்கிறது!

கண்மண் தெரியாத அளவுக்கு அராஜகங்களையும் வன்முறைகளையும் ஊக்குவித்து வளர்த்துவிட்டுவிட்டு, அராஜகத்தை ஒடுக்க அரசு முனையும்போது போலீஸ் தர்பார் என்று இகழ்வது என்ருல்—இந்த நாட்டு மக்களுக்கு மதி இல்லை என்ற ஆணவத்திலேதான் காங்கிரஸ் இன்னமும் இருக்கிறது என்பதுதான் பொருள்.

உலகம் எத்தனையோ சர்வாதிகாரிகளைச் சந்தித்திருக்கிறது.

> 16-ம் லூயி மன்னனைப் பற்றிய வரலாறு சிரித்துக் கொண்டிருக்கிறது.
>
> ஜாரின் கொடுங்கோன்மைகள் சான்று காட்டிக்கொண்டே இருக்கின்றன.
>
> ஹிட்லரின் முடிவு—மக்கள் மனதைவிட்டு இன்னமும் மறைந்து விடவில்லை
>
> முசோலினியின் வாழ்க்கை மூச்சு தோறும் முட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

இவர்களுக்கிடையே—

> ஆபிரகாம்லிங்கன் தெரிகிருர். டிவேலரா தெரிகிருர். மார்டின் லூதர்கிங் தெரிகிருர். கென்னடி தெரிகிருர். காந்தியடிகள்—இயேசு—புத்தர் முதலானவர்களும் தெரியத்தான் செய்கிருர்கள்.

உரத்தகுரலில் குற்றச்சாட்டுக்களை எழுப்பி விடுவதனுலேயே உண்மை புதைகுழிக்குப் போய் விடுவதில்லை.

அடுத்தடுத்துக் கூறுவதனுலேயே பொய்மைகள் புத்துருகொண்டுவிடப் போவதில்லை.

முதல் நாள் கலவரம், வேண்டும் என்றே திட்டமிட்டுக காங்கிரஸ்காரர்கள் நடத்தியதுதான் என்பதனை எவராலும் மறைத்துவிட முடியாது.

தூண்டுதலுக் கிலக்கானேர் தடியடிபட்டிருக்கிருர்கள் என்பதும் பொய்யாக முடியாது.

(15-ம் பக்கம் பார்க்க)

ஐயனார்

"இறைவன்"

இடைதூக்கும் மார்பகங்கள் குலுங்க, பொன்னி
ஏரியினில் குளிப்பதற்குச் செல்ல லானாள்!
கடையினிலே வெண்சுருட்டை வாங்கிக் கொண்டு
களிப்போடு பின்நடந்தான் பொன்னன்! பொன்னி
அடைகாக்கும் கோழியென என்னைச் சுற்றி
அலைவதுதான் ஏனத்தான்?'' என்றாள்! ''உந்தன்
உடைகாக்கும் அழகெல்லாம் எட்டிப் பார்த்து
உன்பக்கம் இழுக்குதடி என்னை'' என்றான்!

குளிப்பதற்குச் செல்கின்றேன்'' என்றாள்! ''என்றும்
கூம்பாத தாமரையே! உடன்குளித்துக்
களிப்பதற்கு வருகின்றேன்!'' என்றான்! ''ஊரார்
கண்டுவிட்டால் சிரிப்பார்கள்'' என்றாள் பொன்னி!
புளிக்காத மாங்கனியே! வாயால் முல்லைப்
பூக்களினைக் காக்கின்ற கண்ணே! இன்பம்
தெளிக்கின்ற பூங்கொத்தே! நம்மைச் சுற்றி
தெரிந்தவர்கள் யாருமில்லை வாடி'' என்றான்!

வெடித்துவிட்டப் பருத்தியைப்போல் சிரித்த பொன்னி
வெட்கத்தால் முகஞ்சிவக்கத் தலைக விழ்ந்தாள்!
உடைத்துவிட்ட கிளைபோன்று தரையைப் பார்க்கும்
உதிராத பூச்சரமே! நாணம் விட்டு
வடித்துவிட்டக் காகிதத்தைப் பிரித்தல் போல
மதிமுகத்தை நீயுயர்த்து'' என்றான்! கஞ்சி
வடித்துவிட்டு நிமிர்த்துகின்ற பானை போன்று
வடிவழகி முகந்தூக்கி அவனைப் பார்த்தாள்!

தேன்குடத்தில் இதழ்ஊற வைத்தப் பெண்ணே!
சேரமன்னன் சின்னமம்பா'' என்றான்! துள்ளும்
மான்குலத்தில் வந்தவளோ ''எங்கே?'' என்றாள்!
''மதிமுகத்தில் புருவத்தில்'' என்றான்! ''எந்தன்
மீன்குலத்து விழிகாட்டி பாண்டி நாட்டு
விறல்சின்னம் என்பீர்கள்! தெரியும்! இந்த
ஆண்குலத்தில் வந்தவரே இப்ப டித்தான்
அளப்பார்கள் கதையெல்லாம்'' என்றாள் பொன்னி!

சேரநாட்டு மலைவளமுன் மார்பு! அங்கே
சிக்குகின்ற தந்தம்உன் தோள்கள்! பாண்டி
வீரநாட்டு நீள்கடல்வுன் கண்கள்! அங்கே
விளைகின்ற முத்தேவுன் பற்கள்! நல்ல
சீரமைந்த சோழவள நாடோ உந்தன்
செழிப்புள்ள உடலாகும்! இனிக்கும் கன்னம்
ஆரமொத்த திரள்தொடைகள் இரண்டும் ஆங்கே
அந்நாட்டில் விளையும்மா வாழை'' என்றான்!

அன்னங்கள் வாழ்ந்ததனை நடையின் மூலம்
ஆதாரம் காட்டுகின்ற பொன்னி! கிள்ளும்
கன்னங்கள் சிவப்பாகச் சிரித்தாள்! பொன்னி
''கால்கடுக்க ஏரிக்கேன் செல்ல வேண்டும்?
நின்றிருக்கும் ஐயனாரின் கோயில் பக்கம்
நிறைந்திருக்கும் நீர்குளத்தில் குளிப்போம்'' என்றான்
பொன்னனுரைக் கேட்டிட்ட பொன்னி! தென்னை
புயல்காற்றில் ஆடுதல்போல் நடுங்கிச் சொன்னாள்!

''உச்சிவெயில் நேரத்தில் அங்கே யாரும்
உட்காரக் கூடாது! மீறிச் சென்றால்
நிச்சயமாய் அறைந்துவிடும் அந்தசாமி!
நேராகப் போய்விடலாம்'' என்றாள்! பொன்னன்
''எச்சிலினை இதழ்க்கூட்டில் தேக்கி வைத்து
எனக்களிக்கும் தேனீயே! மடமை யுந்தன்
உச்சியினில் பிடித்தாட்ட உளரு கின்றாய்!
உண்மையினில் சாமியது அல்ல'' என்றான்!

''போங்கத்தான் எப்பொழுதும் சாமி யென்றால்
பொல்லாத குறும்புத்தான்! அங்கே வேண்டாம்
வாங்கத்தான் போய்விடலாம் நேராய்'' என்றாள்!
''வாய்சிவந்த தாமரையே! அழகை யெல்லாம்
தாங்கிநிற்கும் பொன்தட்டே! ஐய னார்ஓர்
சாமியல்ல; வீரரடி'' என்றான்! அச்சம்
தேங்கத்தான் நிமிர்ந்தவனைப் பார்த்த பொன்னி
திகைத்தபடி ''என்னத்தான் சொன்னீர்?'' என்றாள்!

தாவாத கலைமானே! ஐய னார்ஓ
சாமியல்ல; நம்மைப்போன் றவர்தான்! நாமும்
பூவாத காலத்தில் முன்னோர் நாளில்
போர்க்களத்தில் போரிட்டு வீரத் தோடு
சாவாதப் புகழ்பெற்று நாட்டுக் காக
தன்னுயிரைத் தந்தவரை மக்க ளெல்லாம்
நாவாலேப் புகழ்ந்திடுவர்; அன்றி மேலும்
நடுகலென்ற பெயரினிலே சிலையும் வைப்பர்!''

''வீரனென்று அறிவதற்குக் கையில் வாளும்
வேல்தடுக்கும் கேடயமும்; குதிரை யானை
சீரணியும் சிலையாகச் செய்து வைத்தார்!
சிலையின்கீழ் சிறப்பினையும் தீட்டி வைத்தார்!
பேரறிந்த வீரனுக்கு நடுகல் என்ற
புகழ்சிலையை நாட்டினர்நம் முன்னோர்! புத்திக்
கூரமையோர் அச்சிலையை பிற்கா லத்தில்
கோயிலிட்டுச் சாமியென வணங்க லானார்!''

என்றபொன்னன் விளக்கத்தைக் கேட்ட பொன்னி,
''எல்லாமே புதுமையத்தான்! உம்வி ளக்கம்
தொன்றுதொட்டு வழங்கிவரும் மடமை தன்னைத்
தூளாக்கும் சம்மட்டி! புரட்சி வெள்ளம்!
ஒன்றுமட்டும் விளங்கவில்லை! இவரை ஏனோ
ஊர்மக்கள் ஐயனாரென் றழைத்தார்!'' என்றாள்!
''முன்னோனைக் கொண்டேதான் அழகை யெல்லாம்
மூடிவைக்கும் பெண்ணணங்கே!கேட்பாய்!'' என்றான்

''வழிப்போக்கர் எல்லாரும் அச்சி லையின்
வரலாற்றை அறியாதக் கார ணத்தால்
எழிற்சிலையை யாரென்று அறிய வேண்டி
'ஐயன்யார்? ஐயன்யார்?' என்பர்! அஃதே
சுழித்தோடி மறைகின்ற காலப் போக்கில்
சொல்மாறி இப்போது ஐய னாராய்
மொழிகின்ற நிலைவந்த தென்''றான்! தேன்போல்
முத்தமழை பொழிபவளோ மயங்கி நின்றாள்!

சொல்விளக்கம் தந்தவனோ முன்ந டந்தான்!
சுவைவிளக்கம் கேட்ட வளோ சிரிப்பு யென்னும்
பல்விளக்கம் செய்தபடி பின்ந டக்க
படிவைத்தக் குளத்தருகே வந்து சேர்ந்தார்!
அல்லிமுகம் பெற்றவளோ உடைதி ருத்தி
ஆழ்குளத்தில் உடல்புதைக்க லானாள்! பொன்னன்
பொல்லாதக் குறும்புதனை விழியில் தேக்கிப்
புதைந்திட்ட அவள் உடலைத் தேட லானான்!

அந்த அணைப்பில்

பெருங்காப்பியன்

தொழுவத்தில் கட்டியிருந்த சினைப்பசு மூன்று நாட்களாக புல்லை தின்னுமல் வெறித்த பார்வையோடு, நின்ற இடத்திலேயே சுற்றிச் சுற்றி வந்து. "ம்,... மா!" — எனக் கத்திக்கொண்டே இருந்தது.

அந்த வீட்டின் செல்லக் குட்டியாக வளர்க்கப்பட்ட 'ஜோன்' நாய் "நொய்ங் நொய்ங்" என்று வாலைச் சுழற்றியாட்டி தெருவுக்கும் தோட்டத்துக்குமாக அலைந்து, ரொட்டித் துண்டைத் தின்னுமல்கூட ஏக்கத்தோடு இருந்தது.

இரண்டு வயதை எட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும் சாந்தி, அந்த வீட்டுக்கு ஒரே வாரிசாய் இருந்தும் "அம்சா! அம்சா!"—என்று அடம் பிடித்து அழுதபடியே இருந்தாள். தாயின் கெஞ்சலும் தந்தையின் சீராட்டும் அவள் அழுகையை மாற்ற முடியவேயில்லை. தரையிலும் கையிலும் நிக்காமல் 'வீர்வீர்' என்று அழுதபடியே இருந்தாள். அவளுக்காகக் கிண்ணத்தில் பிசைந்துவைத்த பருப்புச் சோறு அப்படியே உலர்ந்து கிடந்தது.

சமைத்த பாத்திரங்களும் கையாண்ட பொருள்களும் அப்படியப்படியே போட்டது போட்ட வாக்கிலேயே சிதறுண்டிருந்தது. நீர்த் தொட்டியில் கையலம்பக்கூட தண்ணீர் இல்லை.

பார்த்தசாரதி தலைமேல் கையை வைத்துக்கொண்டு சோகத்தோடு ஈஸிச்சேரில் சாய்ந்தார். எச்சிலைக் கூட்டி உள்ளுக்கு முழுங்கவும் முடியவில்லை, தொண்டை அப்படி வலித்தது.

அழுது அழுது ரங்கநாயகிக்கு முகமெல்லாம்வீங்கிவிட்டது. உதடு துடித்துக்கொண்டே இருந்தது.

இடைவிடாது பசுவும் நாயும் குழந்தையும் அழுதுகொண்டேயிருந்தன.

"ஏண்டி! வீண்ஜம்பத்துக்குனு, இந்த வேலையெல்லாம் என்னுல முடியாதான்னு, அந்தப் பெண்ணை அப்படி பாடா...படுத்தினியே! வீடு மூணே நாள்ளே இப்படி மாறிக் கிடக்குதே. இப்ப என்னடி சொல்றே?"—கீழுதட்டை மடித்து பல்லால் கடித்துக்கொண்டே கோபத் தொனியோடு சீறினுர் பார்த்தசாரதி.

ரங்கநாயகி அமைதியாக இருந்தாள்.

"ஏண்டி! அந்தக் குழந்தை அப்படி அழுது?"

"சாப்பிடாமகூட அவளையே நினைச்சி அடம்பிடிக்குது. பசுவுக்கு நான் தண்ணிவச்சா குடிக்கவே மாட்டேனுது. ஜோன்கூட....

பார்த்தசாரதி இடைமறித்தார்—

"வெட்கமாயில்லே! இத்தனை நாளா இப்படித்தான் இந்த வீடு இருந்துதா? இப்போ என்னதான் செய்யப்போறே?"

"அம்சாவை இட்டுக்கிட்டு வந்துடுங்க......" பயந்தபடியே பார்வை மருள கண்ணீரைத் துடைத்துக் கொண்டே சொன்னுள்.

"ஏன்? மீண்டும் அவ உசிரை வாங்கவா! உனக்கு ஒழைச்சிஒடாகி ஒரு பேருமில்லாம, உன் ஏச்சுக்கும் பேச்சுக்கும் தாளாம பிறந்த இடத்துக்கே போனவளை இனிமேலாவது சந்தோஷமாக வாழவிடக்கூடாதா? வேணும்வேணும்; ஒருத்தன்வீட்டுக்குப் போவப்போறவ இனிமேனு சந்தோஷமா இருக்கட்டும். வேணும்னு எல்லாத்துக்கும் ஆளைவச்சிக்கோ"

"நாம்ப கவனிச்சியே இந்தப் பசுவும் நாயும் தீனியே திண்ண மாட்டேங்குது. வேலைக்காரங்க வந்தா மட்டும் எப்படி? நம்ம சாந்திக்கு எக்கத்காலே கைகாலெல்லாம் வீங்கிடும்போலிருக்குங்களே"

'இதை முதலிலேயே யோசிச்சிருக்கணும். இப்ப எந்த முகத்தோடு போய் அழைச்சிகிட்டு வர்ரது. இதெல்லாம் அசிங்கம். உன் இஷ்டத்துக்கு கொஞ்சநாள் வேலைக்காரரை வச்சி குடும்பத்தை நடத்து—பிகு விடாமல், பார்த்தசாரதி முன்னும் பின்னும் ஆடியபடியே உறுதியோடு கூறினுர்.

ரங்கநாயகி தேம்பித் தேம்பி அழுதாள்.

அந்த அழுகையினிடையே வார்த்தைத் தடைபட பேசினுள். "என்னை மன்னிச்சிடுங்க. இனிமே அவளைக் கடிஞ்சிக்கவேமாட்டேன். நானே போய் அவகிட்டவே வேணும்னு மன்ருடி அழைச்சிகிட்டு வந்துடறேன். என்னை அனுப்பிவையுங்க"—பரிதாபமாக வேண்டினுள்.

இதே ரங்கநாயகியின் குரல் ஏழு ஆண்டுகளுக்குமுன், இதே வார்த்தையோடு கெஞ்சியது அவர் காதுகளுக்குள் இப்போதுதான் கேட்ட வார்த்தைபோல ஒலித்தது;

மீண்டும் மீண்டும் அதையே நினைத்துப்பார்த்தார்.

அப்போது பார்த்தசாரதியோடு அவள் வாழ்க்கைப்பட்டு ஐந்தாண்டாகியிருந்தது. அந்த இடைவெளி காலத்தில் மழலை மொழியைக் கேட்கவே வாய்ப்பில்லாமல் இருக்கவே இருவருக்கும் வாழ்க்கையில் ஒருவித பற்றுமில்லாமல் சலிப்புத் தட்டி வெறிச்சோடியிருந்தது.

அந்த நேரத்தில்தான் ரங்கநாயகி இந்த வேண்டுகோளைச் சொன்னுள்.

"ஏங்க! உங்க அன்னுர் மக அம்சாவைக் கொண்டுவந்து நம்மிடமே வச்சிக்கலாமே!"

பார்த்தசாரசி போலியாகச் சிரித்தார். தவறுதலாக ஏதாவது கேட்டுவிட்டோமாவென்று அவள் வெட்கித்துப் போனுள்.

"என்னதான் அவங்களுக்கு ஐந்து பிள்ளைங்க இருந்தாகூட இன்னொருத்தர் ட்டுக்கு அனுப்பிச்சிடுவாங்களா? அதிலும் பெண்ணை"

"ஏன் அப்படி சொல்லிட்டீங்க. நீங்க யாரு? அந்தப் பெண்ணுக்கு சித்தப்பாதானே. கேட்டா மருத்துடுவாங்களா யென்ன!"

"எனக்கென்னவோ நல்லதா படலே. பெண்களெல்லாம் பிறந்த

வீட்டிலேயே வளர்றதுதான் நல்ல துன்னு நினைக்கிறேன்.''

''உங்களுக்குக் கஷ்டம்னு சொல் லுங்க; நானே போய் கேட்டு அழைச்சிகிட்டு வர்ரேன்.''

ரங்கநாயகி திடமான முடிவோடு, கணவரின் அனுமதி பெற்றுச் சென்று வெற்றியோடேத் திரும்பினுள்.

அம்சா, பார்த்தசாரதியின் வீட் டில் காலடி எடுத்து வைத்ததும் ரங்கநாயகிக்குச் சுகமேற்பட்டு விட்டது.

கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பத்து வயது பெண் குடும்ப வேலை யைச் சூட்டிகையாகத் தெரிந்து கொண்டு சித்திக்கு ஓய்வைக் கொடுத்து வந்தாள். சமைக்க நீரெடுக்க வீட்டைக் கண்காணிக்க இப்படி ஓயாது வேலை செய்வதில் அம்சாவுக்கு எவ்வித வெறுப்பும் ஏற்படவில்லை. பிற்கால வாழ்க் கைக்கு அந்நிலை பயிற்சியாக விளங் கட்டுமென்ற திருப்தி உள்ளூர பதிந்துவிட்டது.

நிறைந்த ஓய்வும் மன அமைதி யும் ஏற்பட்டதாலோ என்னவோ, அம்சா வந்த ஐந்தாண்டிற்குப் பின் ரங்கநாயகி தாயானுள்; சாந்தி பிறந்தாள்.

இந்த விஷயத்தில் பார்த்தசார திக்குப் பெருமை பிடிபடவில்லை.

''எங்க அம்சா வந்த நேரம் நல்ல நேரண்டி. இல்லேண்ணு இப்படி யொரு பேறும் சந்தோஷமும் நமக் குக் கிட்டியிருக்குமா?'' — வெளிப் படையாகவே தன் உள்ளுணர்வைத் தெரிவித்துக் கொண்டார்.

ரங்கநாயகிக்கு ஆத்திரம் பொத் துக்கொண்டு வந்தது. 'ஏன் இப்படி வெடிச்சிப் போறீங்க. அப்போ...... சாந்தி பிறந்த நேரம் நல்ல நேர மில்லியோ!''

'நான் அதையா சொல்லவந் தேன். நம்ம அம்சா வந்ததாலே நமக்கு சந்தோஷ மேற்பட்டிருக் குன்றேன்...''

இந்தப் பெருமையை ரங்கநாயகி ஏற்றுக்கொள்ளவில்லை. பிறந்திருக் கும் குழந்தையைவிட எங்கே அவ மேலே பாசத்தை அதிகமா வச்சி டப் போருரோ என்ற பயத்துக்கு அவள் மனம் அடிமையாகிவிட்டது!

சாந்தி பிறந்த பிறகு ரங்கநாயகி பூரணமாகவே ஓய்வு எடுத்துக் கொண்டாள். இதை அம்சாவும் உணர்ந்தாளென்ருலும் அவளுக்கு ஏற்கனவே உதயமாகியிருந்த எண் ணப்படியே வேலையைச் சிரமம் பாராமல் செய்தாள்.

சில நேரங்களில் அம்சாவின்மேல் ஏற்பட்ட பரிதாபத்தால் பார்த்த சாரதி ரங்கநாயகியைக் கடிந்தும் கொண்டார். அப்படிக் கடிந்து கொண்டது அவளுக்கு இன்னும் ஆத்திரத்தைமூட்டியது, அம்சாவை ஒரு எதிரியாகவே கருதத்தொடங்கி விட்டாள்.

இந்நிலை உச்சகட்டத்தை அடைந் ததால் ஏற்பட்ட போராட்டத்தின் முடிவாகத் தன் பெயர் கெடக் கூடாதேயென்ற கிலியோடும் அம் சாவின் திருப்திக்காகவும் அவளைத் தன் 'அண்ணனிடமே அனுப்பி விட்டார்,

மூன்றே நாள் இடைவெளிதான்!

வீடே அல்லோலப்பட்டது. எல்லா வேலையையும் தட்டிக் கழித்து அம்சாவின் மேலேயே பாரத்தைப் போட்டிருந்ததின் விளைவை அவள் அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

வீடே அழுகை யொலியில் மூழ்கி யிருந்தது,

அழுதுகொண்டே ரங்கநாயகி கெஞ்சிக் கொண்டிருந்தாள், ''என் னுங்க! நான் கேக்கக் கேக்க அமை தியா யோசிச்சிக்கிட்டிருக்கீங்களே. பசு கத்தறதும், நாய் அழறதும், நம்ம சாந்தி ஏக்கத்தோடிருக்கறதும் உங்களுக்கே நல்லா இருக்கா?''

'நல்லாதானில்லே! அதுக்காக அவளை மீண்டும் அழைச்சிகிட்டு வந்தா நம்ம வீடு கலகலன்னு இருக் குமா? எத்தனை நாளைக்கு இருக்கும்.' —பார்த்தசாரதி உணர்ச்சி வயப் பட்டு பேசினுர்,

''ஏன் அப்படி சொல்லிட்டிங்க! இந்த வீட்லே எல்லா வேலையை யும் அவளே கவனிச்சியிருந்து திடீர்னு நிண்ணதுலே எல்லாத் துக்கும் அவ மேலேயே ஏக்கமா யிடுச்சி. நானும் ஒரு வேலையையும் தொட்டுக்காமஇருந்ததால, இப்போ எதை எப்படி செய்யறதுன்னு மலைப்பா இருக்கு.''

''உனக்குப் புரியாதுடி...புரியாது. எண்ணைக்கா யிருந்தாலும் 'அம்சா' ஒருத்தன் வீட்டுக்குப் போறவன் றதை மறந்துட்டியா? மறுபடியும் வந்து நம்ம வீட்டிலேயே இருந்தா, இருக்கிற உயிருங்களெல்லாம் அவ மேலேயே இன்னும் அதிகமாபற்றும் பாசமும் வைக்கும். அந்த நேரத் திலே அவளுக்குக் கல்யாணம்

செய்யவேண்டிய சந்தர்ப்பம் வந்தா பழையபடியே இப்படியொரு போராட்டம் வரணுமா?''—பீரிட்டு வந்த துக்கத்தை அடக்கியபடியே ஒவ்வொரு வார்த்தையாக அழுத்திச் சொன்னுர்.

''தப்புங்க! இனி குடும்பத்தை நானே நடத்த என்னைத் தயார் செய்துக்கறேங்க இப்போ மட்டும் ஏதாவது வழி சொல்லுங்க''—பைத்தியம் பிடித்தவள்போல் அவள் அலறுனள்.

ஈஸிசேரிலிருந்து உடலை ஒரு குலுக்கு குலுக்கியபடி விருட்டென்று எழுந்து துடிப்போடு வீட்டுக்குள்ளேயே நடந்து, பெருமூச்சொன்று விட்டுக்கொண்டு அப்படியே அதே சேரில் சாய்ந்தார், ரங்கநாயகியை இரக்கத்தோடு பார்த்தார்.

அவர் செவியில், அந்த வீட்டில் இடைவிடாது எழுந்துகொண்டிருந்த சோக ஒலி ஒலித்துக் கொண்டேயிருந்தது.

சிக்கலைத் தீர்க்கும் தீர்க்கமான அபிப்ராயத்தோடு, சப்தமெழுப்பிச் சொன்னுர். ''ரங்கநாயகி! நீயே என் அண்ணுர்கிட்டே நம் வீட்டு நிலையை விளக்கிச் சொல்லி அம்சாவை அழைச்சிகிட்டு வா! போரதுக்கு முன்னுல் இதை மட்டும் திடமா மனசுக்குள்ளே பதிய வச்சுக்கோ. ஏதோ ஒரு பொண்ணு இருக்கேண்ணு எல்லாத்தையும அவ கிட்டவே விட்டுட்டு நீ ஓய்வெடுத்துக்காதே! அம்சா இங்கே இருக்கும்போதே, ஒவ்வொரு வேலையா நீயே செய்யத் தொடங்கு. குறிப்பா, பசு உன்னையும் நேசிக்கணும், ஜோனுக்கு நீ ரொட்டி வச்சாலும் திண்ணனும்; நம்ம சாந்தி... அவ இல்லேண்ணுலும் அமைதியா இருக்கணும். அப்படியொரு நிலைக்கு உன்னைத் தயார்படுத்திக்கொண்டா, அம்சாவை நல்ல இடமாப் பார்த்து நாமே கலியாணத்தை முடிச்சி புருஷன் வீட்டுக்கு அனுப்பலாம். அதுதான் நமக்கும் பெருமை, அவளுக்கும் மன அமைதி. என்ன, புரிஞ்சுதா?''

''அப்படியே செய்யறேங்க. இப்பவே புறப்படுறேன். கிருஷ்ணகிரி போர எக்ஸ்பிரஸ் பஸ் திருப்பத்தூர்ல நிக்குமில்லிங்களா? அதுக்கே போறேன்.''-மிகவிரைவோடு ஆயத்தமாகி ரங்கநாயகி புறப்பட்டாள்.

அவள் தன் வீட்டுவாயிலிலிருந்து கீழே அடியெடுத்து வைக்கவும், ஒரு குதிரை வண்டி வந்து வாயிலெதிரில் நிற்கவும் சரியாயிருந்தது. அதிலிருந்து அம்சாவுக்குக் கைத் தாங்கல் கொடுத்தபடியே அவள் அப்பா — பார்த்தசாரதியின் அண்ணனும் இறங்கினுர்.

மனைவியை வழியனுப்ப வாயிலில் நின்ற பார்த்தசாரதியும், ரங்கநாயகியும் பதறிப் போனுர்கள்.

''ஒண்ணுமில்லே தம்பி! வந்ததிலே இருந்து, சாந்தி சாந்தி...... ஜோன்ஜோன் அப்படின்னே முணுமுணுத்துக்கொண்டு அப்படியே ஜுரமா படுத்துட்டா. என்னம்மாண்ணு கேட்டாலும் 'ஒண்ணுமில்லேப்பா உங்களை யெல்லாம் பார்கலாம்ணுதான் வந்தேன்'ரு! உங்களை ஒரு நாளுகூட பிரிந்திருக்க இவளால் முடியலியே. என்னவோ தம்பி! நம் மகளை நீங்க வளர்க்கற விதத்தாலே தான் அவ அப்படி இருக்கா.'' — என்றபடியே வீட்டினுள் நுழைந்தார், வந்த வண்டியை அனுபபிவிட்டு.

ரங்கநாயகியும் பார்த்தசாரதியும் கண்கலங்கி நின்றுவிட்டனர். அம்சா உதரலோடு ஓடிவந்து சாந்தியைக் கட்டியணைத்துத் தூக்கிக்கொண்டாள்.

சினைப் பசும்மா!' என்று சந்தோஷத்தோடு கத்தியது. ஜோன்நாய், வாலைக் குழைத்து, அவர்களைச் சுற்றி நன்றியோடு வலம் வந்தது. சாந்தியின் முகத்தில் சிரிப்பு ரேகை படர்ந்தது.

''அது ...அவள் வந்த நேரம்தான்' —என்பதை இப்போது ரங்கநாயகி ஒப்புக்கொள்ளும் தோரணையில், அம்சாவைத் தழுவி, வீட்டினுள் அழைத்துச் சென்ருள். அந்த அணைப்பில் கனிவும், பாசமும், பிடிப்புமிருந்தது. ●

11-ம் பக்கத் தொடர்ச்சி

தடியடிப்பட்டவர்கள் தொண்டர்கள்! அதிகாரிகள்! போலீசுக்காரர்கள்!

போலீஸ் தடியடி மட்டுமே நடைபெற்றிருந்தால் போலீசுக்காரர்கள், அதிகாரிகள் எவ்வாறு காயம் பட்டிருக்க முடியும்?

பிரச்னையை ஒரு கோணத்திலிருந்து மட்டும் அலசிப் பார்த்து விமர்சிக்க வருவதென்பது ஒரு தலையானது. உண்மைகளை மறைத்துவிடச் செய்யும் சூழ்ச்சி என்றே கொள்ளத்தக்கது.

கையில், ஏழும் எடுத்தும் இருக்கிறது என்பதாலே நிலைமைகளை மாற்றி விமர்ச்சிக்க வருவோர், தம்மையறியாமலேயே வன்முறையைத் தூண்டுகிருர்கள் என்றுதான் பொருள் தரக்கூடும்.

தடியடி நிலைமை, ஊர்வலக்காரர்கள் பாதை மாறிச் செல்ல முனைந்ததால் விளைந்தது என்பதை அத்தகையோர் மூடி மறைக்கிருர்கள்.

எனவே, காந்தியடிகளே அந்தக் கலக ஊர்வலத்தைக் கண்டிருந்தால்கூட கண்ணீர்விட்டு அழுதுவிட்டிருப்பார்!

முக்காட்டுச் செயலின் மூடத்தனம்
கண்டு, இந்தக் கயமைத்தனத்தையா நாம்
ஊட்டிவளர்த்தோம்எனகலங்கிவிட்டிருப்பார்!

எனவே நண்பா! ஆகஸ்டு போராட்டம் என்பதன் பேரால் அமளியைத் தோற்றுவித்தவர்கள் எழுப்புகிற ஓலம்—அவர்களே தோற்றுவித்துக் கொண்டதாகும்!

நீதி விசாரணை, நீதி விசாரணை என்பதெல்லாம் தம்மீது எழுப்பப்படும் குற்றச்சாட்டுகளை மூடி மறைக்கவே யாகும்!

ஒரு கவியினுல் கழகத்தை அழிக்கவோ, களங்கமுண்டாக்கவோ முடியாது!

கழகம்—மக்களுடையது.
ஆட்சி—மக்களால் தரப்பட்டது.

அந்த மக்களது ஆதரவும், அரவணைப்பும் கழக அரசுக்குத் தாராளமாக இருக்கிறது. தாராளமாகக் கிடைக்கும் அளவுக்குக் கழகமும், மக்களுக்கு நன்மைகளைச் செய்து வருகிறது.

இவை இரண்டும் தங்குத் தடையின்றி நடைபெற்றுக்கொண்டிருக்கிறவரையில்—எத்தகைய ஊர்வலங்களாலும் நம் இலட்சியத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை மட்டும் மனதில் கொண்டு செயல்பட்டால் போதும்!

துள்ளிவரும்பகையைத் தூள்! தூள்! தூள்!! என்றே ஆக்கிக் காட்ட முடியும்.

அன்புள்ள,

திருவாரூர்-முத்துராமன்.

KAMALA
SUGAR MILLS LTD.,

(GLUCOSE FACTORY)

Amaravathi Nagar (P.O.) UDUMALPET. S. RLY.,

COIMBATORE DIST.

★

LIQUID GLUCOSE "GRADE-A"

WE HAVE STARTED PRODUCTION OF OUR NEW GLUCOSE "GRADE-A" FROM THIS MONTH ONWARDS. THIS GLUCOSE IS PURIFIED BY "DEMINERALISER" WHICH GIVES GOOD COLOUR AND AVOIDS STICKNESS.

SO IT WILL BE A GREAT ADVANTAGE TO THE CONSUMERS OF GLUCOSE LIQUID FOR THE MANUFACTURE OF CONFECTIONARY SWEETS, BISCUITS, SYRUPS AERATED WATERS AND PHARMACEUTICALS.

Our Distributors For Madras, South Arcot, North Arcot and Chinglepat Districts:

P. SINGARAVELU,
310, Wall Tax Road, Madras-3.

OUR SALES BRANCHES AT:—

MADURAI: 28-B. ELUKADAL AGRAHARAM.
TRICHY: 9, CHINNAKKADAI STREET.
KUMBAKONAM: 84, J. P. KOIL EAST STREET.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்–8
86, திருக்கச்சிநம்பி தெரு. அல்லி அச்சகத்தில். அச்சிட்டு வெளியிடப்படுகிறது.